**தினமணி (13.08.2022)**

# கோயில் கட்டுமான பணிகளுக்கு டிஎன்பிஎல் ஆலை நிதியுதவி



கோயில் திருப்பணிக்குழு உறுப்பினரிடம் நிதியுதவிக்கான காசோலையை வழங்குகிறார்கள் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) வி.ஜி.சுரேஷ், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார். உடன் ஆலை அதிகாரிகள் உள்ளிட்டோர்.

கரூர், ஆக.12: நான்கு கோயில்களின் கட்டுமானப் பணிகளுக்கு டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.95,000 நிதியுதவி வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், புகழூர் தமிழ் நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித்திட்டத்தின் கீழ் ஆலையைச் சுற்றி அமைந்துள்ளகிராமங்களிலுள்ள கோயில் கட்டுமானப் பணிகளுக்குநிதியுதவி வழங்கும்நிகழ்ச்சி ஆலை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆலை பொது மேலாளர் (மனிதவளம்) வி.ஜி.சுரேஷ், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ். சிவக்குமார் ஆகியோர் தலைமை வகித்து, கரூர், மறவாபாளையம் மற்றும் கரியாம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள 4 கோயில்களின் கட்டுமானப் பணிகளுக்கு ரூ.95,000 நிதியுதவிக்கான காசோலையை கோயில் திருப்பணிக் குழுவினரிடம் வழங்கினர். நிகழ்ச்சியில் ஆலை அதிகாரிகள், பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காலைக்கதிர் (11.08.2022)**

# டி.என்.பி.எல்., நிறுவனம் நிதி உதவி வழங்கல்

**கரூர், ஆக. 11-**

கரூர் மாவட்டம், காகிதபுரம் தமிழ் நாடு செய்தித்தாள் காகித நிறுவன வளாகத்தில், சமுதாய நலப்பணி திட்டத்தில், நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. பொது மேலாளர் (மனிதவளம்) சுரேஷ் தலைமை வகித்தார்.

இதில், மறவாபாளையம் மற்றும் கரியாம் பட்டி உள்ளிட்ட நான்கு கோவில்களுக்கு கட்டமைப்பு பணிகளுக்கு நிதி உதவியாக, 95 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உடனிருந்தார்.

## தினமலர் (13.08.2022)

### கோயில் கட்டமைப்பு பணிகளுக்கு நிதி வழங்கியது டிஎன்பிஎல்

வேலாயுதம்பாளையம், ஆக. 13-

டிஎன்பிஎல் நிறுவனம் தனது சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களின் கோயில் கட்டமைப்பு, புனரமைப்பு பணிகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது. அதன்படி கரூர், மரவாபாளையம், கரியாம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள 4 கோயில்களின் கட்டமைப்பு பணிகளுக்காக ரூ.95 ஆயிரம் நிதி உதவி வழங்கியது.

டிஎன்பிஎல் வளாகத்தில் நடந்த இதற்கான நிகழ்ச்சியில் மனிதவளத் துறை பொது மேலாளர் சுரேஷ், முதுநிலை மேலாளர் சிவக்குமார் ஆகியோர், நிதி உதவிக்கான காசோலைகளை கோயில் திருப்பணி குழுவினரிடம் வழங்கினர்.